**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 294/2016</u>**

**<u>நாள்.26.02.2026</u>**

**<u>வா.சா. 1</u>- நடராஜன்**

**<u>1,2,4 முதல் 9 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 வது பிரதிவாதி தெய்வக்கனியின் வாரிசுகள் தான் 4 முதல் 9 வது பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்குப் போட்டுள்ள கிணற்றுக்கு வடபக்கம் 4 முதல் 9 வது பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட நஞ்சை இடங்கள் என்றால் சரிதான். மேற்படி நஞ்சை இடங்கள் 3-1/2 ஏக்கருக்கு மேல் இருக்கும் என்றால் தெரியாது. மேற்படி நஞ்சை இடங்கள் சுமார் எவ்வளவு விஸ்தீரணம் இருக்கும் என்றால் எங்கள் கிணற்றில் தான் 3-1/2 ஏக்கர் உள்ளது அது வேறு ஆளிடம் வாங்கியது அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நான் கிரையம் வாங்கியதாக சொல்லக்கூடிய 3-1/2 ஏக்கர் இடம் தாவா கிணற்றிற்கு பாத்தியப்பட்ட நஞ்சை இடம் என்றால் சரிதான். 4 முதல் 9 வது பிரதிவாதிகள் தாவா கிணற்றில் இருந்து தான் தங்களுக்கு பாத்தியப்பட்ட நஞ்சை இடங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குப் போட்டுள்ள கிணற்றிலிருந்து 4 முதல் 9 வது பிரதிவாதிகள் எவ்வளவு இடத்திற்கு நீர் கொண்டு செல்கிறார்கள் என்றால் 24 செண்ட். மேற்படி 24 செண்ட் 4 முதல் 9 வது பிரதிவாதிகள் பூர்வீக இடம் என்றால் சரிதான். 3 வது பிரதிவாதியின் தகப்பனார் அரியவநாடார் என்றால் சரிதான். அரியவநாடாருக்கு 3 வது பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் உண்டு என்றால் சரிதான். அரியவநாடாரின் இதர வாரிசுகளை இந்த வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் என்னுடைய கிணற்றிலிருந்து பிரதிவாதிகள் வேறு இடத்திற்கு தண்ணீர் கொண்டு போகக்கூடாது என வழக்குப் போட்டுள்ளேன். தாவா கிணற்றிற்கு பாத்தியப்பட்ட இடங்களின் சர்வே எண் விபரங்களை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா கிணறு எந்த புல எண்ணில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3 வது பிரதிவாதியின் வாரிசுகள் தாவா கிணற்றிலிருந்து எந்த புல எண்ணில் உள்ள சொத்துக்களுக்கு தண்ணீர் கொண்டு செல்கிறார்கள் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்களை நான் தபசில் சொத்து விபரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா கிணறு எனது தரப்பு வழக்கின்படி ராமசாமி நாடார், அரியவநாடார், மாரிமுத்து மூப்பனார் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். ராமசாமி நாடார், அரியவநாடார், மாரிமுத்து மூப்பனார் மூன்று பேரும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது வழக்கில் ராமசாமி நாடார் வாரிசுகள் யார் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாரிமுத்து மூப்பனார் வாரிசுகள் யார் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாரிமுத்து மூப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 பேர் கடற்கரை, குமார். மேற்படி குமாரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இதே வழக்குச் சொத்தைப் பொறுத்து, இதே நீதிமன்றத்தில் அ.வ.எண். 130/2011 வழக்கை எனது தகப்பனார் மற்றும் சிவ நாடார், வேலாயுத நாடார், கடற்கரை மூப்பனார் சேர்ந்து 2, 3 பிரதிவாதிகள் மற்றும் பீட்டர்ராஜ் மீது விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தனர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சார்பு செய்யப்பட்ட வழக்குரை நகல் அ.வ.எண். 130/2011 வழக்கிற்கானது என்றால் சரிதான். சாட்சி **அ.வ.எண். 130/2011 வழக்கின் வழக்குரை சார்பு செய்யப்பட்ட நகலை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.வ.எண். 130/2011 வழக்கில் எனது தகப்பனார் வேலாயுத நாடார் 3 வது வாதி என்றால் சரிதான். அ.வ.எண். 130/2011 வழக்கானது இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள அதே வழக்கு மூலத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.வ.எண். 130/2011 வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்தார்கள் என்றால் சரிதான். அ.வ.எண். 130/2011 வழக்கானது மேல் நடத்த வேண்டாம் என நீதிமன்றத்தில் எழுதி கொடுக்கப்பட்டு தள்ளுபடியானது என்றால் சரியல்ல சிவன் நாடார் இறந்ததால் தள்ளுபடியானது.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் அ.வ.எண். 130/2011 வழக்கின் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **சாட்சி அ.வ.எண். 130/2011 வழக்கின் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகலை ஒப்புக்கொண்டிருப்பதால் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.வ.எண். 130/2011 வழக்கினை அதன் வாதிகள் நீதிமன்ற அனுமதியுடன் வாபஸ் பெறவில்லை என்றால் சரிதான். ராமசாமி நாடார், அரியவநாடார், மாரிமுத்து மூப்பனாருக்கு மட்டும் தாவா கிணறு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிணற்று பட்டா உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்லக்கூடிய கிணற்று பட்டா எனது கைவசம் உண்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் கைவசம் உண்டு அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வழக்கில் சொல்லிய கிணறு என்னுடைய எவ்வளவு இடத்திற்கு பாத்தியப்பட்டது என வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கில் சொல்லிய கிணறு ராமசாமி நாடார், அரியவநாடார், மாரிமுத்து மூப்பனார் ஆகியோரின் எவ்வளவு இடத்திற்கு பாத்தியப்பட்டது என வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3 வது பிரதிவாதியின் மக்கள் தாவா கிணற்றிலிருந்து எவ்வளவு நேரம் தண்ணீர் எடுக்கிறார்கள் என்றால் 2 மணி நேரம். தாவா கிணற்றிலிருந்து எவ்வளவு நேரம் யார் தண்ணீர் எடுக்க வேண்டும் என வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா கிணற்றில் 5 H.P. மோட்டார் உள்ளது என்றால் சரிதான். தாவா கிணற்றில் சரிபாதியில் 28 ல் 27 பங்கு பீட்டர்ராஜ் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. பீட்டர்ராஜ் அவரது இடத்தையும், கிணற்றில் அவருக்கு பாத்தியப்பட்ட பங்கையும் குமாரத்தியான ஜெசிந்தா என்பவருக்கு 04.02.1985 ல் நன்கொடை ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது அது மோசடியானது. ஜெசிந்தா அதே சொத்தை 3 வது பிரதிவாதிக்கு தனது பவர் ஏஜெண்ட் மூலமாக 21.10.2002 ல் கிரையம் மூலமாக பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது அது வேறு கிணறு சம்பந்தப்பட்டது அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை.

தாவா கிணற்றில் 1/12 பாகம் துரைப்பாண்டி தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. துரைப்பாண்டி தேவருக்கு பின்னர் அவரது மகன் 2 வது பிரதிவாதி தாவா கிணற்றில் 1/12 பாகத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதி அவரது மக்களான ரவிக்குமார், கார்த்திக்ராஜா ஆகியோர்களுக்கு நன்கொடை மூலமாக கிணறு பாத்தியதை மற்றும் இடத்தை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர்களிடமிருந்து 3 வது பிரதிவாதி 24.06.2010 ல் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 3 வது பிரதிவாதி ஜெசிந்தா, ரவிக்குமார், கார்த்திக்ராஜா ஆகியோரிடமிருந்து வாங்கிய பங்கு மற்றும் தனது பூர்வீக பங்கை சேர்த்து தனது இடத்திற்கு தண்ணீர் செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 3 வது பிரதிவாதிக்கு கூடுதல் பங்கு இருப்பதால் கெட்ட எண்ணம் கொண்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கேட்ட பரிகாரங்கள் நிறைவேற்ற முடியாதவை என்றால் சரியல்ல. ராமசாமி நாடார், மாரிமுத்து மூப்பனார் ஆகியோருக்கு தாவா கிணறு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த உரிமை ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு அ.வ.எண்.130/2011 வழக்கு தீர்ப்பின் மூலமாக முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**1,2,4 முதல் 9 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.26 17:47:25 +0530